பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

26 12 2024 **THURSDAY** **6.30 PM**

மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. நாட்டின் வளர்ச்சியில் இளையோர் சக்தி எப்போதும் முக்கிய பங்கு வகித்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் பாலியல் வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட மாணவிக்கு நீதிகிடைக்கும் வரை பிஜேபி துணைநிற்கும் என்று மத்திய இணையமைச்சர் திரு எல். முருகன் தெரிவித்துள்ளார்.

3. தமிழகத்தில் திமுக அரசின் அலட்சியத்தினால் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லாத சூழல் ஏற்பட்டுள்ளதாக அஇஅதிமுக குற்றம் சாட்டியுள்ளது.

4. நாட்டிலேயே முதல் முறையாக இருசக்கர ஆம்புலன்ஸ் சேவை திருவண்ணாமலை மாவட்டம் ஜவ்வாது மலையில் தொடங்கப்பட்டுள்ளது.

5. நேபாள் சர்வதேச சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Meiraba Luwang Maisnam** பட்டம் வென்றார்.

--- இனி விரிவான செய்திகள் ----

**<<<<<>>>>>>**

நாட்டின் வளர்ச்சியில் இளையோர் சக்தி எப்போதும் முக்கிய பங்கு வகித்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் வீர சிறார் தினத்தையொட்டி நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

அரசியலமைப்புச்சட்டம் அனைவரும் சமம் என்பதை கற்பிப்பதாக அவர் கூறினார்.

*(சவுண்ட் பைட் - பிரதமர் (1) - 39 செகண்ட்ஸ்)*

அரசியல் சாசனத்தின் 75-ஆவது ஆண்டு தின கொண்டாட்டங்களோடு, இந்த ஆண்டு வீர சிறார் தினம் கொண்டாடப்படுவது சிறப்பானதாகும் என்று பிரதமர் தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட் - பிரதமர் (2) - 44 செகண்ட்ஸ்)*

<<<<<>>>>>>

சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் மாணவி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட சம்பவத்துக்கு கண்டனம் தெரிவித்து அஇஅதிமுக மற்றும் பிஜேபி சார்பில் இன்று சென்னையில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

அண்ணா பல்கலைகக்கழக வளாகம் அருகே போராட்டம் நடத்த முயன்ற முன்னாள் அமைச்சர் திரு ஜெயக்குமார் உட்பட அஇஅதிமுக-வினரை காவல்துறையினர் கைது செய்தனர்.

இதேபோல், சென்னை வள்ளுவர்கோட்டம் அருகே போராட்டம் நடத்த முயன்ற பிஜேபி-யின் மூத்த தலைவர்களில் ஒருவரான திருமதி தமிழிசை சௌந்தரராஜன் உட்பட அக்கட்சியினர் கைது செய்யப்பட்டனர்.

பிஜேபி-யின் மூத்த தலைவர் உட்பட அக்கட்சியினரை தமிழக காவல்துறை கைது செய்திருப்பது கடும் கண்டனத்திற்குரியது என்று மத்திய இணையமைச்சர் திரு எல். முருகன் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள நபர் மீது ஏற்கனவே வழக்குகள் உள்ளதாகவும், அவர் திமுக-வின் முக்கிய நிர்வாகிகள் மற்றும் அமைச்சருக்கு நெருக்கமானவர் என்ற தகவல் தமக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட மாணவி குறித்த விவரங்கள் அடங்கிய முதல் தகவல் அறிக்கையை பொது வெளியில் கசிய விட்டிருப்பது வன்மையாக கண்டித்தக்கது என்றும் அவர் கூறியுள்ளார்.

பெண்களுக்கு எதிராக அதுவும் கல்லூரிக்குள் அத்துமீறிய ஒரு நபரால் மாணவிகளுக்கு துன்பம் ஏற்படுவதை எண்ணி திமுக அரசு தங்களது நிர்வாகம் குறித்து சுய பரிசோதனை செய்ய வேண்டியது அவசியமாகிறது என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்த சம்பவத்தில் நீதிகிடைக்கும் வரை பாதிக்கப்பட்ட மாணவியின் குடும்பத்துக்கு பிஜேபி துணையாக இருக்கும் என்றும் திரு எல். முருகன் தெரிவித்துள்ளார்.

அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமியும், அக்கட்சியின் நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் கைது செய்யப்பட்ட சம்பவத்திற்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், திமுக அரசின் அலட்சியத்தின் காரணமாகத்தான் தமிழகத்தில் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லாத சூழல் ஏற்பட்டிருப்பதாக குற்றம் சாட்டியுள்ளார்.

சமூக வலைதளத்தில் கருத்து சொல்பவர்களை உடனுக்குடன் கைது செய்யும் திமுக அரசு, பல வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்ட ஒருவரை கைது செய்யாமல் இருந்ததே இந்த சம்பவத்துக்கு காரணம் என்றும் திரு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பான முதல் தகவல் அறிக்கையை விவரங்களுடன் வெளியிட்ட அதிகாரிகளை பணியிடை நீக்கம் செய்ய வேண்டும் என்று பாமக நிறுவனர் மருத்துவர் ச ராமதாசு சமூக வலைதளத்தில் வலியுறுத்தியுள்ளார்.

தேமுதிக பொதுச்செயலாளர் திருமதி பிரேமலதா விஜயகாந்தும், இதுபோன்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் நடைபெறாமல் இருப்பதை திமுக அரசு உறுதி செய்ய வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் இக்கோரிக்கையை விடுத்துள்ள அவர், ஜனநாயக ரீதியாக கேள்விகள் கேட்பவர்கள் மற்றும் போராடுபவர்களுக்கு திமுக அரசு உரிய பதில் அளிக்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

இதற்கிடையே, இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய மாநில சட்ட அமைச்சர் திரு ரகுபதி, அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் மாணவி பாலியல் வன்கொடுமை வழக்கில் கைது செய்யப்பட்ட நபருக்கும், திமுக-வுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்று கூறியுள்ளார்.

பாதிக்கப்பட்ட பெண்ணை முடக்க வேண்டும் என்ற நோக்கம் அரசுக்கு இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இப்பிரச்சினையில் பாதிக்கப்பட்ட பெண் புகார் கொடுத்தவுடன் காவல்துறை விரைவாக செயல்பட்டு சம்பந்தப்பட்ட நபரை கைது செய்துள்ளதாகவும் திரு ரகுபதி கூறினார்.

இந்நிலையில், இந்த வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள நபர் திமுக-வை சேர்ந்தவர் என்று பிஜேபி மாநிலத்தலைவர் திரு அண்ணாமலை கூறியுள்ளார்.

இன்று கோவையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பலருக்கும் பாலியல் ரீதியாக சம்பந்தப்பட்ட நபர் சொந்தரவு கொடுத்திருப்பார் என சந்தேகம் எழுந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

பெண்களுக்கு பாதுகாப்பு வழங்காத திமுக அரசை கண்டித்து பிஜேபி-யினர் நாளை முதல் தங்கள் வீட்டின் முன்பு நின்று போராட்டம் நடத்த உள்ளதாகவும் திரு அண்ணாமலை தெரிவித்தார்.

இதற்கிடையே, சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் மாணவி பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்ட சம்பவம் நெஞ்சை பதற வைப்பதாக திமுக துணை பொதுச்செயலாளர் திருமதி கனிமொழி கூறியுள்ளார்.

சமூக வலைளதத்தில் இதனை பதிவு செய்துள்ள அவர், இதுதொடர்பாக கைது செய்யப்பட்ட நபர், நீண்டகாலமாக மாணவிகளுக்கு பாலியல் ரீதியாக அச்சுறுத்தலை ஏற்படுத்திய குற்றவாளி என்பது, அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

பெண்களுக்கு எதிரான எந்தவகை குற்றமாக இருந்தாலும், அதை துணிச்சலுடன் வெளிக்கொண்டுவருவதற்கான நம்பிக்கையை ஏற்படுத்துவது அனைவரின் கடமையாகும் என்றும் திருமதி கனிமொழி கூறியுள்ளார்.

இந்நிலையில், இந்த பாலியல் வன்கொடுமை சம்பவத்திற்கு தேசிய மகளிர் ஆணையமும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

பாதிக்கப்பட்ட மாணவியின் விவரங்களை பொது வெளியில் வெளியிட்ட அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழக காவல்துறை தலைவருக்கும், தேசிய மனித உரிமை ஆணையத்தின் தலைவர் திருமதி விஜயா ரஹாத்கர் உத்தரவிட்டுள்ளார்.

<<<<<>>>>>>

நாட்டிலேயே முதல் முறையாக இருசக்கர ஆம்புலன்ஸ் சேவை திட்டம் திருவண்ணாமலை மாவட்டம் ஜவ்வாது மலையில் தொடங்கப்பட்டுள்ளதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா. சுப்பிரமணியன் கூறியுள்ளார்.

ஜவ்வாது மலையில் நடைபெற்ற இதற்கான விழாவில் கலந்துகொண்டு பேசுகையில் அவர் இதனை தெரிவித்தார்.

போக்குவரத்து வசதி இல்லாத மலைகிராம மக்கள் பயன்பெறும் வகையில் இந்த திட்டம் தொடங்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். மாநிலத்தில் உள்ள ஆயிரத்து 500 கிராமங்களில் நான்குசக்கர வாகனங்கள் செல்ல முடியாத பகுதிகள் இந்த திட்டத்தின்மூலம் மருத்துவ சேவைகளை பெறும் என்றும் திரு மா. சுப்பிரமணியன் கூறினார்.

<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

பெரம்பலூர் சர்க்கரை ஆலையில், நடப்பாண்டிற்கான கரும்பு அரவைப்பணியை மாநில அமைச்சர் திரு சிவசங்கர் இன்று தொடங்கிவைத்தார்.

----------------

திருவாரூர் மாவட்டத்தில் புகையிலை பயன்பாட்டினால் ஏற்படும் தீமைகள் குறித்து இதுவரை 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளதாக காவல்துறை கண்காணிப்பாளர் திரு ஜெயக்குமார் கூறியுள்ளார்.

------------------

கடலூர் மாவட்டம் பண்ருட்டி வட்டத்துக்கு உட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் வளர்ச்சித் திட்டப்பணிகளை ஆட்சியர் திரு சிபி ஆதித்யா செந்தில்குமார் இன்று ஆய்வு செய்தார்.

**<<<<<>>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

நேபாள் சர்வதேச சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Meiraba Luwang Maisnam** பட்டம் வென்றார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர், 21-17, 21-16 என்ற செட் கணக்கில், இந்தியாவின் **Rahul Bharadwaj** –ஐ வென்றார்.

----------------

உலக **Rapid** மற்றும் **Blitz** செஸ் சாம்பியன் போட்டி நியூயார்க்கில் இன்று தொடங்குகிறது.

இந்தியாவின் சார்பில் ஆடவர் பிரிவில் அர்ஜுன் எரிகேசி, பிரக்யானந்தா, அரவிந்த் சிதம்பரம் உள்ளிட்ட 10 பேரும், மகளிர் பிரிவில் **Koneru Humpy, Vaishali, Harika Dronavalli** உட்பட 8 பேரும் இதில் பங்கேற்கின்றனர்.

----------------

இந்தியாவுக்கு எதிரான நான்காவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் டாஸ் வென்று முதலில் பேட் செய்துவரும் ஆஸ்திரேலியா, முதல் இன்னிங்சில் ஆட்டநேர இறுதியில் 6 விக்கெட் இழப்பிற்கு 311 ரன் எடுத்துள்ளது.

மெல்பர்னில் இன்று தொடங்கிய இப்போட்டியில், **Steven Smith** 68 ரன்னுடனும், **Pat Cummins** 8 ரன்னுடனும் களத்தில் உள்ளனர்.

பும்ரா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

------------------

அகமதாபாத் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Zeel Desai** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

**<<<<<END>>>>>**